**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 06.10.2023

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**ஆப்பிரிக்க ஆராய்ச்சியாளருக்கான சிவி.ராமன் சர்வதேச பெல்லோஷிப் விருது**

அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை (DST) மற்றும் வெளியுறவு அமைச்சகம் (MEA), இந்திய அரசு (GoI), இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறை கூட்டமைப்பு (FICCI) மூலம் ஆப்பிரிக்க ஆராய்ச்சியாளர்களுக்கான சி .வி.ராமன் பெல்லோஷிப் திட்டத்தை அறிமுகப்படுத்தியது . இத்திட்டம் ஆப்பிரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் இடையே அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு மூலம் மனித திறனை மேம்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டது . இந்த மதிப்புமிக்க கூட்டணி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் இந்தியாவிற்கும் ஆப்பிரிக்க நாடுகளுக்கும் இடையிலான பிணைப்பை மேலும் வலுப் படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஆப்பிரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் இடையே அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பை வளர்க்கும் அதே வேளையில் , தங்கள் சொந்த ஆராய்ச்சி திறன்களை மேம்படுத்துவதற்காக, இந்தியாவில் உள்ள ஒரு விஞ்ஞானியின் வழிகாட்டுதலின் கீழ் ஆப்பிரி க்க ஆராய்ச்சியாளர் ஆராய்ச்சி நடத்த இது வாய்ப்புகளை வழங்குகிறது . ஏழு எகிப்து விஞ்ஞானிகள் இந்த ஆண்டு சி .வி.ராமன் பெல்லோஷிப்களைப் பெற்றுள்ளனர் . அவற்றில் இரண்டு விஞ்ஞானிகளுக்கு மட்டுமே வேளாண் அறிவியலுக்கான விருது வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

முனைவர் முகமது இஸ்மாயில் , மக்காச்சோள ஆராய்ச்சி விஞ்ஞானி , வயல் பயிர்கள் ஆராய்ச்சி நிறுவனம் , வேளாண் ஆராய்ச்சி மையம் , எகிப்து, 2023-24 ஆம் ஆண்டிற்கான சி .வி. ராமன் சர்வதேச பெல்லோஷிப்பை பெற்றுள்ளார். இவர் கோவையிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பேராசிரியர் முனைவர் ந .செந்தில், முதன்மையர் (முதுகலை பட்ட மேற்படிப்பு பயிலகம்) மற்றும் இயக்குனர் (தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரி தொழில்நுட்ப மையம் )

அவர்களின் வழிகாட்டுதலின்படி அவர் மக்காச்சோள மூலக்கூறு இனப்பெருக்கத்தில் பணியாற்ற உள்ளார். இந்த சி .வி.ராமன் சர்வதே ச பெல்லோஷிப் இரு நிறுவனங்களுக்கிடையேயான தொடர்பை பலப்படுத்தும்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் வெ .கீதாலட்சுமி, விருது பெற்றவரைக் கௌரவித்து ஆப்பிரிக்க ஆராய்ச்சியாளர்களுக்கான சி .வி.ராமன் சர்வதேச பெல்லோஷிப்பைப் பெறுவதில் ஈடுபட்ட விஞ்ஞானியைப் பாராட்டினார் , மேலும் இந்தியாவிற்கும் ஆப்பிரிக்காவிற்கும் இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்த மற்ற விஞ்ஞானிகள் இன்னும் பல நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

***மக்கள் தொடர்பு அலுவலர்***